# “இந்த M.K.STALIN குரலை இந்தியாவின் குரலாக எல்லோரிடமும் கொண்டு செல்லுங்கள்!”

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!... முதல்பக்கத் தொடர்ச்சி

அந்த விளம்பரங்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா?

ஒன்றிய அரசின் பல்வேறு ஓய்வூதியத் திட்டங்களில் 2017 முதல் 2021-ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிதி, ஒன்றிய அரசின் விளம்பரங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு முறைகேடு நடந்திருக்கிறது என்று அம்பலப்படுத்தப் பட்டிருக்கிறது.


**டோல் பிளாசாவில் லட்சக்கணக்கில் முறைகேடு?**

இந்த முறைகேடுகளுக்கெல்லாம் உச்சம், ‘டோல் பிளாசா’ முறைகேடு தான். பயணம் செய்யும் பொது மக்களிடம் ‘டோல் பிளாசா’ மூலமாக, நாள்தோறும் மாபெரும் மோசடியான வசூல் நடந்திருக்கிறது.

5 ‘டோல் பிளாசா’க்களைமட்டும்தணிக்கை செய்ததில், விதிகளுக்குப் புறம்பாக, வாகன ஓட்டிகளிடம் இருந்து ரூ.132 கோடியே 5 லட்சம் ரூபாயை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வசூலித்து இருப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கை குற்றம் சாட்டியிருக்கிறது.

அவ்வாறு பார்த்தால் இந்தியா முழுவதும் எத்தனை ‘டோல் பிளாசா’க்கள் இருக்கின்றன. அதன் மூலமாக எத்தனை லட்சம் கோடி ரூபாய் முறைகேடாக வசூலாகி இருக்கும் என்று கொஞ்சம் கணக்கிட்டுப் பாருங்கள்.

★ அடுத்து, நாடு முழுவதும் இருக்கும் சாலைகளை இணைக்க ‘பாரத்மாலா’ என்ற திட்டத்தை 2015ஆம் ஆண்டு கொண்டு வந்தார்கள். அதில், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ. 15 கோடியே 37 லட்சம் என்பதை, ரூ. 32




கோடியே 17 லட்சமாக ஆக்கி ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். இந்த 8 ஆண்டு காலத்தில் 13 ஆயிரம் கிலோ மீட்டருக்குத்தான் சாலை போடப்பட்டிருக்கிறது. 40 விழுக்காடு கூட வேலைகள் முடியவில்லை.

★ இதேபோல், “துவாரகா விரைவு நெடுஞ்சாலை” திட்டம், ‘பாரத்மாலா பரியோஜனா’-1 என்ற திட்டத்திலும் முறைகேடுகள் நடந்திருக்கிறது. திட்டமிட்ட மதிப்பைவிட 1,278 மடங்கு கூடுதல் தொகை செலவிடப்பட்டிருக்கிறது.

**‘ஆயுஷ்மான் பாரத்’ திட்டத்தில்பல கோடி ரூபாய் முறைகேடு?**

★ அடுத்து, சுகாதாரத் துறை. இந்தியாவிற்கே முன்னோடியாக ‘கலைஞர் காப்பீட்டுத் திட்டம்‘ தமிழ்நாட்டில்தான் 2009- ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கிட்டத்தட்ட 9 ஆண்டுகள் கழித்து, 2018-இல் பிரதமர் மிகப் பிரமாண்டமாக அறிவித்த திட்டங்களில் ஒன்று, ‘ஆயுஷ்மான் பாரத்’ திட்டம். ஏழைக் குடும்பங்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரை காப்பீடு வழங்கப்படுவதாக பா.ஜ.க. சொல்கிறது.

‘ஆயுஷ்மான்பாரத்’திட்டத்தின் கீழ் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று இறந்த நோயாளிகளுக்கு, இறந்த பின்பும், சிகிச்சை அளிக்கப்படுவதாகச் சொல்லி, காப்பீட்டுக் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, காப்பீட்டுத் தொகை வழங்கப் பட்டிருக்கிறது.

ஒரே நேரத்தில், ஒரு நோயாளி பல மருத்துவமனைகளில், அனுமதிக்கப் பட்டிருப்பதாக கணக்குக் காட்டுவது, ஒரே ஆதார் நம்பரை பலருக்கும் கொடுப்பது, ஒரே ஃபோன் நம்பரை பலரும் பதிவு செய்வது, ஏன், ஃபோன் நம்பரே கொடுக்காமல் பதிவு செய்வது என்று எக்கச்சக்கமாக முறைகேடுகள் நடந்திருக்கிறது. எத்தனை பேர் - எத்தனை கோடி என்று தனித்தனி நம்பர்களாகச் சொன்னால், கேட்கும் எல்லோருக்கும் தலையே சுற்றிவிடும்!




**‘அயோத்தியா’ திட்டம் முதல் ‘ஆயுஷ்மான் பாரத்’ திட்டம் வரை என்று எல்லா வற்றிலும், 7.5 லட்சம் கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாக சி.ஏ.ஜி. அளவிட்டிருக்கிறார்கள். இதுவரைக்கும் இதற்கு பிரதமரோ - சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர்களோ பதில் சொல்லவில்லை. அவர்களால் பதில் சொல்லவும் முடியாது. அதனால்தான் இதில் இருந்து மக்களை திசைதிருப்ப வெவ்வேறு அரசியலை கையில் எடுக்கிறனர்.**

**மக்களை திசைதிருப்ப முயலும் மோடி?**

இவ்வாறு, ‘அயோத்தியா’ திட்டம் முதல் ‘ஆயுஷ்மான் பாரத்’ திட்டம் வரை என்று எல்லாவற்றிலும், 7.5 லட்சம் கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாக சி.ஏ.ஜி. அளவிட்டிருக்கிறார்கள். இதுவரைக்கும் இதற்கு பிரதமரோ - சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர்களோ பதில் சொல்லவில்லை. அவர்களால் பதில் சொல்லவும் முடியாது. அதனால்தான் இதில் இருந்து மக்களை திசைதிருப்ப வெவ்வேறு அரசியலை கையில் எடுக்கிறனர்.

ஆனால், ஏழை, எளிய - பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடியின - மக்களுக்கு விரோதமாகச் செயல்பட்டு வருபவர்தான் நரேந்திர மோடி என்று, இப்போது நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்து விட்டார்கள். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் - சமீபத்தில் நடந்த இடைத்தேர்தலிலும் பா.ஜ.க. வீழ்த்தப்பட்டிருப்பதே, இதற்கான அடையாளம்.

2024 தேர்தலில், பா.ஜ.க. ஒட்டுமொத்தமாக வீழ்த்தப்பட வேண்டும். பா.ஜ.க.வின் வகுப்புவாத - ஊழல் - கார்ப்பரேட் அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைக்க இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஒரே குரலாக முழங்க வேண்டும். பரந்து விரிந்த நம் இந்திய நாட்டைக் காப்பாற்றுகிற கடமை, நம் எல்லோரின் கையிலும்தான் இருக்கிறது!




இந்த M.K.STALIN குரலை, இந்தியாவின் குரலாக எல்லோரிடமும் கொண்டு செல்லுங்கள் என்று உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ந்து இந்தியாவுக்காகப் பேசுவோம்! இந்தியாவைக் காப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

## முறைகேடுகளின் உச்சம் ‘டோல் பிளாசா’!




**“2024 தேர்தலில், பா.ஜ.க. ஒட்டுமொத்தமாக வீழ்த்தப்பட வேண்டும். பா.ஜ.க.வின் வகுப்புவாத - ஊழல் - கார்ப்பரேட் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஒரே குரலாக முழங்க வேண்டும். பரந்து விரிந்த நம் இந்திய நாட்டைக் காப்பாற்றுகிற கடமை, நம் எல்லோரின் கையிலும்தான் இருக்கிறது!”**




# வகுப்புவாத - ஊழல் - கார்ப்பரேட் அரசியலில் ஈடுபடும் பா.ஜ.க.விற்கு முற்றுப்புள்ளி வைத்திடுவீர்!